## நிதி முகாமைத்துவ வினைத்திறன் செயற்திட்டம் - 2014

நிதி முகாமைத்துவ வினைத்திறன் செயற்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2010 யூன் 07 ஆந் திகதிய 2624 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.05(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

நிதி முகாமைத்துவ வினைத்திறன் செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சும் தற்போதைய நிதி அமைச்சும் செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கலிற்கு பொறுப்பாக உள்ளது. அரச நிதி முகாமைத்துவ முறைமையில் கடன்பெறுவோருடைய நிதி இடைவெளி மற்றும் வினைத்திறனை உயர்த்துவதே செயற்திட்டத்தின் நோக்கமாக உள்ளது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்தக் கிரயம் ரூபா 5,344.8 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 40.8 மில்லியனானதுடன் அதில் தொழில்நுட்ப உதவி நோக்கத்திற்கான ஐ.அ.டொலர் 2 மில்லியன் மானியம் உள்ளடங்கலாக ரூபா 4,034.8 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 30.8 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டிருந்தது. செயற்திட்டமானது 2010 மே 01 இல் அதன் நடவடிக்கைகளை தொடங்கியிருந்ததுடன் 2013 ஒக்தோபர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. செயற்திட்ட காலமானது 2016 ஏப்ரல் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வுப் பரிசோதனைகளின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை வெளியிடுவது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினது மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறானவை. நிதிக்கூற்றுக்கள் பொருட்படுத்தக் கூடிய தவறான கூற்றுக்கள் அற்றன என்பதை நியாயபூர்வமாக உத்தரவாதம் செய்யும் வகையில் இலங்கை

---

கணக்காய்வு நியமங்களுக்கேற்ப கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள வெளிப்படுத்தல்களையும் தொகைகளையும் ஆதரிக்கவல்ல சான்றுகளைப் பரீட்சித்தல், நிதிசார் கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமையினால் கடைப்பிடித்த கணக்கீட்டுக் கோட்பாடுகள் மற்றும் முக்கிய மதிப்பீடுகள், நிதிக்கூற்றுக்களது ஒட்டு மொத்தச் சமர்ப்பணம் மீதான மீளாய்வு என்பவற்றைக் கணக்காய்வு உள்ளடக்கியது. எனது உயர் அறிவுக்கும் நம்பிக்கைக்கும் அமைய, கணக்காய்வு நடவடிக்கைகளுக்குத் தேவையான போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்கள் என்பன பெறப்பட்டன என்றும் அதற்கமைய, எனது அபிப்பிராயத்திற்கான போதியளவு அடிப்படை எனது கணக்காய்வின் மூலம் வழங்கப்பட்டது எனவும் நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்குத் தேவையெனக் கருதப்படும் முறைமைகளும் கட்டுப்பாடுகளும், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புகள் கணக்கீட்டுப் பதிவேடுகள் போன்றவற்றையும் பரிசீலனை உள்ளடக்கியிருந்தது.

(அ) செயற்திட்ட முகாமை மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டினையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையினையும் உறுதிப்படுத்துவதற்கு ஏற்ப உள்ளகக் கட்டுப்பாட்டின் கண்ணோட்டத்தில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியவையாக இருந்தனவா என்பதும்

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயல்முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்போரின் நிதியிலிருந்து செயற்திட்டம் மீதான செலவு, செயற்திட்டத்தின் நிதிசார் மற்றும் பௌதீகரீதியான முன்னேற்றம், செயற்திட்டத்தின் செயற்பாடுகளிலிருந்து உருவாகும் சொத்துக்களும் பொறுப்புகளும், கடன் முதலியவற்றின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் போன்றவற்றினைக் காட்டுவதற்குத் தொடர்ச்சியான அடிப்படையில் போதியளவு கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டுள்ளதா என்பதும்

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்டவாறு நடைபெற்றனவா என்பதும்

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதி, பொருட்கள், உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்

(ஊ) செயற்திட்ட அமுல்படுத்தலுக்காக கடைப்பிடித்த வகைப்படுத்தலின் பிரகாரம் செலவினம் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(எ) இலங்கை கணக்கீட்டு நியங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கையில் விதந்துரைத்தவாறான நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கன்

### 2.1 அபிப்பிராயம்

எனது பரிசீலனையிலிருந்து தென்படுவதும் சிறந்த தகவல்களுக்கும் எனக்களிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளை பேணியுள்ளதெனவும் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய, 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையினை விளக்குகின்றன என்பதும்

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போது விசேட (டொலர்) கணக்கிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்களானவை (எஸ்ஓஈஎஸ்) கடன் உடன்படிக்கையில் விதந்துரைத்த வேண்டுதல்களின் படி மீள் நிரப்பலிற்கான விண்ணப்பங்களை ஆதாரப்படுத்துவதற்கு நியாயமாக நம்பிக்கை வைக்கக்கூடியதாக இருந்தன என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்தஞ் செய்வதற்கு முகாமைத்துவம் திருப்பதிகரமான நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளன என்றும்

(ஊ) கடன் உடன்படிக்கையில் விதித்துரைக்கப்பட்ட நிதியளிப்புக் கட்டுப்பாடு உடன்பாடு ஏற்பட்டுள்ளன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2. கணக்காய்வு அவதானிப்புகள்

#### 2.2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2007 ஏப்ரல் 05 இன் எம்எஸ்டி 33 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 4.2.1 ஆம் பந்தி மற்றும் 2009 ஏப்ரல் 29 இன் அமைச்சரவைத் தீர்மானம் என்பவற்றின் கீழ் குறிப்பிடப்பட்ட எல்லையை விஞ்சி மீளாய்வாண்டின் போது ரூபா 195,000 தொகையான சம்பளங்கள் செயற்திட்ட பணிப்பாளர் பெற்றிருந்தார் என அவதானிக்கப்பட்டது.

## 3. நிதி மற்றும் பௌதீக மீளாய்வு

### 3.1 நிதியத்தின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதிகளின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான மறறும் 2014 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான முக்கியமான புள்ளிவிபரங்கள் சில கீழே காண்பிக்கப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கை பிரகாரம் நிதியளிக்க வேண்டுமென உடன்பட்ட தொகை | | 2014 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட தொகை | பயன்படுத்தப்பட்ட தொகை | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2014 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ. டொலர் மிலலியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மிலலியன் | ஐ.அ. டொலர் மிலலியன் | ரூபா. மில்லியன் | ஐ.அ. டொலர் மிலலியன் | ரூபா. மில்லியன் |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 30.80 | 4,034.80 | 1,000.00 | 1.25 | 164.00 | 6.00 | 799.00 |
| இலங்கை அரசாங்கம் | 10.00 | 1,310.00 | 65.00 | 0.43 | 56.00 | 1.30 | 171.00 |
| | 40.80 | 5,344.8 | 1,065 | 1.68 | 220.00 | 7.30 | 970.00 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மேற்குறிப்பிட்ட தகவலின் பிரகாரம், செயற்திட்ட காலப்பகுதியின் நான்கு ஆண்டுகள் கடந்த பின்னரும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தால் கடன் பெறுகைகளின் 19.48 சதவீதம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஆலோசனை சேவைகளின் கொள்வனவிற்காக செய்யப்பட்ட ரூபா 471.6 மில்லியன் தொகையான ஒதுக்கீடு 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் முழுமையாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.2 பௌதீக முன்னேற்றம்

செயற்திட்டமானது ஒருங்கிணைந்த திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமை மற்றும் இயலளவு அபிவிருத்திகள் என்பவற்றின் தாபிப்பு என்ற பெயரில் இரண்டு பிரதான கூறுகளை கொண்டுள்ளது. 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அத்தகைய கூறுகளின் பௌதீக முன்னேற்றத்தில் பின்வரும் அவதானிப்புகள் செய்யப்பட்டன.

(அ) தகவல் முறைமை உட்கட்டமைப்பு, தனிப்பட்ட மற்றும் ஒருங்கிணைந்த திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமை வழங்கலிற்கான ஒப்பந்தம் 2013 ஒக்தோபர் 14 இல் வெளிநாட்டு கம்பனியொன்றிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன்

உள்ளூர் பகுதி வலையமைப்பு பொருத்துதல், இருக்கின்ற கணக்கீட்டு முறைமையை தரமுயர்த்தல், முறைமை வேண்டுகை குறிப்புரைகளை விரைவாக்குதல் மற்றும் உரிய அமைச்சின் குறிக்கோள்கள் மீது செய்யப்பட வேண்டிய மாற்றங்கள் போன்றவற்றிலுள்ள தாமதம் காரணமாக 2014 திசெம்பர் 31 இல் அவற்றின் பௌதீக முன்னேற்றம் மெதுவாக இருந்தது.

(ஆ) வேலைத் திட்டத்தின் பிரகாரம், ஒருங்கிணைந்த திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமையில் பயிற்றுவிக்கப்பட வேண்டுமென ஏறத்தாழ 5000 பயன்பாட்டாளர்கள் வேண்டியிருந்தனர். எவ்வாறாயினும், முறைமை பொருத்துதலிலுள்ள தாமதம் காரணமாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் நடவடிக்கை தொடங்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 விதிவிலக்கான செலவினம்

செயற்திட்டத்தால் ஏற்பட்ட ரூபா 9,459,620 தொகையான அச்சிடல் கட்டணங்கள் செயற்திட்டத்தின் குறிக்கோள்களை அடைவதற்கு நேரடியாக தொடர்புபட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 3.4 நிதிக்கட்டுப்பாட்டு விடயங்கள்

1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையில் செய்யப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நிலையான சொத்துக்களின் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.